அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல: 10/2015

எனது இல. CS/SLAS/AMEN/MINUT/(தொகுதி II)

அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு – 07.
2015 மாதம் 23 ஆந் திகதி .

சகல அமைச்சுக்களினதும் செயலாளர்கள்,
மாகாண சபை பிரதான செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
மாவட்டச் செயலாளர்கள்,
பிரதேச செயலாளர்கள்.

**<u>இலங்கை நிர்வாக சேவைப் பிரமாணக்குறிப்பை நடைமுறைப்படுத்தல்.</u>**

இலங்கை சனநாயக சோசலிசகுடியரசின் 2005 நவம்பர் 14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள 2005.10.28 ஆந் திகதிய இலங்கை நிர்வாக சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு பதிலாக 2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்கத்தைக் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிய இலங்கை நிர்வாக சேவை பிரமாணக் குறிப்பு பதிலீடு செய்யப்பட்டு 2012 ஜூலை மாதம் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

## 01. <u>வினைத்திறன்காண் தடை</u>

I. இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இல. 1842/2 ஐக் கொண்ட மற்றும் 2013.12.23 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிய சேவைப்பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை, தமது நன்நடத்தைக் காலம் அல்லது நியமனத் தினத்தில் இருந்து 03 ஆண்டுகளுள் அல்லது தமது நியமனத் தினத்திலிருந்து நடாத்தப்படும் முதல் 04 பரீட்சைத் தவணைகளுக்குள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். அவ்வாறே இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை, இரண்டாம் தரத்திற்கு நியமனம் பெற்று 03 ஆண்டுகளுள் அல்லது இரண்டாம் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர், நடாத்தப்படும் முதல் 04 பரீட்சை தவணைகளுள் பூர்த்தி செய்தல் வேண்டும்.

II. 2012.07.01 இலிருந்து 2013.12.23 வரை ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள், இல. 1419/3 ஐக் கொண்ட மற்றும் 2005.11.14 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2005.10.28 ஆந் திகதிய முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய 2014.12.31 வரை நடாத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளில் பின்வரும் பாடங்களில் சித்தியடைவதை அடிப்படையாகக் கொண்டு முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் ஏற்புடைய பாடங்கள் சித்தியெய்தியதாக கருதப்படும்.

| **<u>இல. 1419/3 மற்றும் 2005.11.14 ஆந் திகதிய முன்னைய சேவைப் பிரமாணக்குறிப்பு</u>** | **<u>இல. 1842/2 ஐக் கொண்ட மற்றும் 2013.12.23 ஆந் திகதிய புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு</u>** |
|---|---|
| 1) சட்டம் (முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை) | சட்டம் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |
| 2) நிர்வாகம் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) | நிர்வாகம் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |
| 3) பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) | பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |
| 4) அரசதுறை நிதிமுகாமைத்துவம் (இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) | அரசதுறை நிதிமுகாமைத்துவம் மற்றும்பெறுகைசெயன்முறை (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |
| 5) ஆங்கிலம் (முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) | இணைப்பு மொழித் தேர்ச்சி (இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை) |

III 2012/07/01 ஆந் திகதிக்கு முன்னர் வலுவானதாக காணப்பட்ட பிரமாணக் குறிப்புக்களின் கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டியிருந்த போதிலும், 2014.12.31 வரை அவ்வாறு சித்தியெய்துவதற்கு தவறுகின்ற அலுவலர்கள், அப்பிரமாணக்குறிப்புக்களுக்கமைய, குறித்த வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் பாடங்களுக்கு இணையொத்த சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆம் அட்டவணையின் 1.5 (ஆ) இன் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள குறித்த பாடங்களில் சித்தியடைவதனூடாக வினைத்திறன்காண் தடைப்பரீட்சையை பூர்த்தி செய்தல் வேண்டும்.

IV. 2014.12.31 வரை முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்பட்ட வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளில் சித்தியடையாத சந்தர்ப்பங்களில், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் நடாத்தப்படும் முதலாவது அல்லது இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளில் தோற்றி, சேவைப்பிரமாணக் குறிப்பின் II ஆம் அட்டவணையின் 1.5 (ஆ) இன் கீழ் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறித்த பாடங்களைப் பூர்த்தி செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

குறிப்பு

1. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் காணப்படுகின்ற, இடைக்காலத்தினுள் சேவையில் நிரந்தரமாக்கப்படும் அலுவலர்கள், 2014.12.31 வரை முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்பட்ட இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் கீழ் அரசாங்க நிதி முகாமைத்துவ பாடத்தில் சித்தயெய்தாத அலுவலர்கள், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்படும் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் கீழ் அரசாங்க நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை செயற்பாடு எனும் பாடத்தில் II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்துவதற்கு முன்னர் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

2. அவ் இடைக்காலத்தினுள் சேவையில் நிரந்தரமாக்கப்படாத அலுவலர்கள், அதன் பின்னர் சேவையில் நிரந்தரமாக்கப்படுவதற்கு, புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கமைய நடாத்தப்படும் முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையின் கீழ் அரசாங்க நிதி மற்றும் பெறுகை செயற்பாடு எனும் பாடத்தில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. <u>மேற்படி 2 இல், அலுவலர்களுக்கு</u> 2013.12.31 ஆந் திகதியில் இருந்து நடாத்தப்படும் **<u>அடுத்துவரும்</u>** 04 பரீட்சைத் தவணைகளுக்குத் தோற்றி, அரசாங்க நிதி மற்றும் பெறுகை செயற்பாடு எனும் பாடத்தில் சித்தியெய்தும் பொருட்டு சலுகைக் காலம் வழங்கப்படும்.

V. முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை, சேவையில் நியமிக்கப்பட்ட திகதியில் இருந்து 06 ஆண்டுகளுள் சித்தியடைய வேண்டியிருந்த போதிலும், புதிய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய, இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தவேண்டியது, II ஆந் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டு 03 ஆண்டுகள் தாண்டமுன்னரே ஆகும். அதற்கமைய முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் 06 ஆண்டுகளுள் சித்தியடையாதிருப்பதன் காரணமாக சம்பள ஆண்டேற்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு புதிய சேவைப் பிரமாணம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013.12.23 ஆந் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் மீளவும் சம்பள ஆண்டேற்றங்களை வழங்க முடியும்.

<u>குறிப்பு:</u>

**<u>உதாரணமாக, 2006.10.02 ஆந் திகதி நியமனம் பெற்று 06 ஆண்டுகளுள்</u>** ( அதாவது, 2012.10.02 ஆந் திகதிக்கு முன்னர்) தமது இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியடையவேண்டியிருந்த போதிலும், 2013.12.23 வரை அவ் வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்தத் தவறிய அலுவலர் ஒருவரின் சம்பள ஆண்டேற்றம் 2012.10.02 ஆந் திகதியில் இருந்து 2013.12.22 வரை மட்டும் ஒத்திவைக்கப்படும்.

VI. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2013.12.23 ஆந் திகதி இலங்கை நிர்வாகச் சேவையின் தரம் I இற்கு தரமுயர்த்தப்பட்டு 2013.12.23 ஆம் திகதியன்று தரம் I இல் ஐந்து (05) ஆண்டுகாலத்தைப் பூர்த்தி செய்துள்ள அலுவலர்களுக்கு, புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாவது (III) வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டுமெனும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும். 2008.12.23 இலிருந்து 2013.12.23 வரை இலங்கை நிர்வாக சேவையின் வகுப்பு 1 / தரம் 1 இற்கு தரமுயர்த்தப்பட்ட அலுவலர்களுக்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்றாம் (III) வினைத்திறன்காண் தடைப்பரீட்சையில் சித்தியெய்துவது தொடர்பாக மேலதிகமாக இரண்டு ஆண்டு சலுகைக்காலம் வழங்கப்படும்.

VII. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பில் அல்லது முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை நிர்வாக சேவையின் தரம் I, II, III ஐச் சேர்ந்த அலுவலர்கள் தமது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையை உரிய தினத்திற்கு முன்னர் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளதுடன், அவ்வாறல்லாத சந்தரப்பங்களில் அவ் அலுவலர்களின் வருடாந்த சம்பள ஆண்டேற்றம் குறித்தவாறு ஒத்திவைக்கப்படும்.

## 03. <u>விலக்களித்தல்</u>

I. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் 2012.07.01 ஆந் திகதிக்கு முன்னர் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் தொடர்பாக அவர்கள் ஆட்சேர்க்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பின் கீழ் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை மற்றும் மொழித்தேர்ச்சி ஆகியவற்றிலிருந்து விலக்களிப்பதற்கு வழங்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் அவ் அலுவலர்கள் தொடர்பாக தொடர்ந்தேச்சையாக நடைமுறையிலிருக்கும். அது தொடர்பான விபரங்கள் இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

II. புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு நடைமுறைப்படுத்தப்படும் 2012.07.01 ஆந் திகதிக்கு பின்னர் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின், முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சட்டம் எனும் பாடத்தில் சித்தியெய்த வேண்டும் எனும் தேவைப்பாட்டிலிருந்து விலக்களிக்கப்படும்.

1. பரிஸ்ட்டர் ஒருவராக அல்லது உயர்நீதிமன்ற வழக்கறிஞராக இருத்தல் வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்துபெற்ற சட்டம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இச் சுற்றறிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்றது.



ஜே. தடல்லகே
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி
மற்றும் சனநாயக ஆட்சி அமைச்சு

**புதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழான விலக்களிப்புக்கள்**

(01) இல. 5097/7 மற்றும் 1988.06.07 ஆந் திகதி ஆந் திகதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழான விலக்களிப்புக்கள்

முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

| பாடம் | விலக்களிப்பு |
|---|---|
| சட்டம் | 1. பரிஸ்ட்டராக அல்லது இலங்கை உயர் நீதிமன்ற வழக்கரறிஞராக இருத்தல்.<br>2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம். |
| சமூகவியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சமூகவியல் தொடர்பான பட்டம் |
| பொருளியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரம் தொடர்பான பட்டம் |
| ஆங்கிலம் | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட அறிமுகப் பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் ஆங்கிலப் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல். |

இரண்டாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

| பாடம் | விலக்களிப்பு |
|---|---|
| முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி | இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடத்தப்படும் ஆரம்ப பயிற்சியை நிறைவுசெய்திருத்தல் வேண்டும். |

மொழித்தேர்ச்சி

| பாடம் | விலக்களிப்பு |
|---|---|
| இரண்டாவது மொழிப் பரீட்சை | க.பொ.த. (சா.த.) ஆங்கில பாடத்தில் சித்தி |

**(02)** இல. 1419/3 மற்றும் 2005.11.14 ஆந் திகதி ஆந் திகதிய சேவைப் பிரமாணக்குறிப்பின் கீழான விலக்களிப்புக்கள்

முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

| பாடம் | விலக்களிப்பு |
|---|---|
| சட்டம் | 1. பரிஸ்ட்டராக அல்லது இலங்கை உயர் நீதிமன்ற வழக்கரறிஞராக இருத்தல்.<br>2. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டம். |
| சமூகவியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சமூகவியல் தொடர்பான பட்டம் |
| பொருளியல் | அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொருளாதாரம் தொடர்பான பட்டம் |

மொழித்தேர்ச்சி

| பாடம் | விலக்களிப்பு |
|---|---|
| அடுத்த அரசகரும மொழி (சிங்களம்/தமிழ்தேர்ச்சி சேவைப் பிரமாணக் குறிப்பின் II ஆம் பிரிவில் (காண்பிக்கப்பட்டுள்ள)<br>**குறிப்பு**<br>2012.01.02. திகதி அல்லது அதன் பின்னர் மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலர்களுக்கு ஏற்புடையதாகாது | 1. க.பொ.த. (சா.த.) பரீட்சையில் முதலாம்மொழி அல்லது இரண்டாம்மொழியாக அடுத்த அரசகரும்மொழியில் சித்தி<br>2.க.பொ.த. (சா.த.) பரீட்சையில் விருப்பத்திற்குரிய பாடமொன்றாக அடுத்த அரசகரும்மொழியில் சித்தி<br>3.அரசகருமமொழிகள் திணைக்களத்தின் அடிப்படை அல்லது உயர்மொழிப் பாடநெறியில் சித்தி<br>4.அரசகருமமொழிகள் திணைக்களத்தின் ஆரம்பமட்ட அல்லது மேல்மட்ட பாடநெறியில் சித்தி |